भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

भारत

ரூ.5000 Rs.5000

पाँच हजार रुपये FIVE THOUSAND RUPEES

सत्यमेव जयते

INDIA

PUDUCHERRY पुदुच्चेरि புதுச்சேரி 173946

G. VIJAYAKUMAR
Stamp Vendor
Bahour

<u>மார்க்கெட் மதிப்பு ரூபாய் **2,50,000/-**</u>

<u>கிரயம் ரூபாய் **2,50,000/-**</u>

2016-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதி (19/09/2016), தமிழ்நாடு, விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுக்கா, கோட்டக்குப்பம் பேருராட்சி, சோதனைகுப்பம், மாரியம்மன் கோவில் தெரு, 38/49-ம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்து வரும் திரு.R. கருணாகரன் அவர்களின் மனைவி திருமதி **K.** பிரேமா அவர்களுக்கு.

புதுச்சேரி-605 009, உழவர்கரை நகராட்சி, தட்டாஞ்சாவடி, திலகர் நகர், 2-வது குறுக்குத் தெரு, 19-ம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்து வரும் திரு.N. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மூத்தக் குமாரத்தியும், திரு.V. அசோகன் அவர்களின் மனைவியுமாகிய திருமதி.**A.** விஜயலட்சுமி அவர்களால் 06/05/2016-ல் பாகூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4-புத்தகம் 2016-ம் வருடத்திய **1271**-ம் எண்ணாகப் பதியப்பட்ட பொது அதிகாரப்பத்திரப்படி, புதுச்சேரி-607 402, பாகூர் கொம்யூன், சேலியமேடு அஞ்சல், பின்னாச்சிக்குப்பம், மெயின் ரோடு, 1-ம் எண்ணுள்ள இல்லத்தில் வசிக்கும் காலஞ்சென்ற நந்தகோபால் நாயுடு அவர்களின் குமாரர் திரு.**N.** கிருஷ்ணமூர்த்தி ஆகிய நான், மேற்கூறிய எனது மூத்தக்குமாரத்தி திருமதி.A. விஜயலட்சுமி அவர்களின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக்கொடுத்த சுத்த விற்கிரயப் பத்திரமாவது.

**கிரயம் வாங்குபவர்.** **கிரயம் கொடுப்பவர் முகவராக.**

K. பிரேமா

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 1 of 8
Sub-Registrar

K. பிரேமா

191459

22097/B1
19/9/2016
(4-5)

SALE

Presented in the office of the Sub-Registrar of Bahour with the photographs & fingerprints affixed and fee of Rs. 1447/- Paid between the house of 4 P.M. and 5 P.M. On the 19th September 2016 by Prema
Signature: Prema

ஆதார் அடையாள அட்டை எண்.

**4485 1735 0905**

## CLAIMANT



K.பிரேமா

Seal of The Sub-Registrar of Bahour

**K.** பிரேமா,

க/பெ.R. கருணாகரன்,

38/49, மாரியம்மன் கோவில் தெரு,

சோதனைகுப்பம்,

கோட்டக்குப்பம் பேரூராட்சி,

வானூர் தாலுக்கா,

விழுப்புரம் மாவட்டம்.

K.பிரேமா

வாக்காளர் அடையாள அட்டை எண்.

**PY/01/013/039202**

## EXECUTION ADMITTED BY



Seal of The Sub-Registrar of Bahour

**N.** கிருஷ்ணமூர்த்தி,

த/பெ.K. நந்தகோபால் நாயுடு,

1, மெயின் ரோடு,

பின்னாச்சிக்குப்பம்,

சேலியமேடு அஞ்சல்,

பாகூர் கொம்யூன்,

புதுச்சேரி-607 402.

SCANNED ON : 18 · 9 · 16
SCANNED BY

1345
1
1
100
1447

## IDENTIFIED BY:

**M.** அசோக் பிரிதிவிராஜ், த/பெ.மனோகரன்,

12-B, ரங்கன் வீதி, MGR நகர், திண்டிவனம்,

திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

{ஓட்டுநர் உரிமம் எண் TN32Y 20100000546}

T. munusamy

**T.** முனுசாமி, த/பெ.துளசி,

30, பழைய காமராஜ் நகர், பாகூர்,

பாகூர் கொம்யூன், புதுச்சேரி-607 402.

{ஓட்டுநர் உரிமம் எண் 20079786}

19th September - 2016

G. MUNISSAMY
SUB-REGISTRAR

Registered as No. 22097 of 2016 Book I
Dated 19th September 2016
Sub-Registrar

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 2 of 8
Sub-Registrar

Seal of The Sub-Registrar of Bahour

K.பிரேமா

भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

भारत

रु.5000 Rs.5000

पाँच हजार रुपये FIVE THOUSAND RUPEES

सत्यमेव जयते

INDIA

PUDUCHERRY पुदुच्चेरि புதுச்சேரி

173945

G. VIJAYAKUMAR
Stamp Vendor
Bahour

--: 2 :--

இதனடியில் சொத்து விபரத்தில் கண்டு விவரிக்கப்படும் சொத்தானது புதுவை இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் 18/08/1970 தேதியிட்ட O.S.No.22/1968-ம் எண்ணாக வழங்கப்பட்ட தீர்மானப்படி புதுச்சேரி-605 007, அரியாங்குப்பம் கொம்யூன், திம்மநாயக்கன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.ராகவ ரெட்டியார் அவர்களின் குமாரத்தியும், திரு.ராஜாராம் ரெட்டியார் அவர்களின் மனைவியுமாகிய திருமதி.பத்மாவதி அம்மாள் அவர்களுக்குச் சொந்தமாய் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்ததை, மேற்கூறிய திருமதி.பத்மாவதி அம்மாள் அவர்களிடமிருந்து 19/06/1980-ல் எழுதி அதனை 02/07/1980-ல் பாகூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1-புத்தகம் 205-தொகுதி 139-முதல் 142-வரை பக்கங்களில் 1980-ம் வருடத்திய 525-ம் எண்ணாகப் பதியப்பட்ட கிரயப்பத்திரப்படி திரு.N. கிருஷ்ணமூர்த்தி ஆகிய எனக்குச் சொந்தமாய் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்து, மேற்படி திரு.N. கிருஷ்ணமூர்த்தி ஆகிய என்னால் எனக்கு பொது அதிகாரம் அளித்த எனது மூத்தக்குமாரத்தி திருமதி.A. விஜயலட்சுமி அவர்களுக்கு ஆதரவாக 06/05/2016-ல் பாகூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1-புத்தகம் 2016-ம் வருடத்திய **10276**-ம் எண்ணாகப் பதியப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி மேற்படி பொது அதிகாரம் அளித்த எனது மூத்தக்குமாரத்தி திருமதி.A. விஜயலட்சுமி அவர்களுக்குச் சொந்தமானதும், அவர் எனக்களித்த மேற்குறிப்பிட்ட பொது அதிகாரப்பத்திரப்படி,

கிரயம் வாங்குபவர். கிரயம் கொடுப்பவர் முகவராக.

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 3 of 8

भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

भारत

रु.5000 Rs.5000

पाँच हजार रुपये FIVE THOUSAND RUPEES

सत्यमेव जयते

INDIA

PUDUCHERRY पुदुच्चेरि புதுச்சேரி

173944

G. VIJAYAKUMAR
Stamp Vendor
Bahour

2016



தற்போது என்னுடைய பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் இருந்து வரும் கீழ்க்கண்ட சொத்தை நான் தங்களுக்கு கிரயம் செய்துகொடுக்க ஒப்புக்கொண்டு, நமக்குள் விலைபேசி தீர்த்துக்கொண்ட கிரயத் தொகை ரு.2,50,000/- இந்த தொகை ருபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்தையும் நான் தங்களிடமிருந்து இன்றைய தேதியில் இதனடியில் கையொப்பம் வைக்கும் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் ரொக்கமாக எண்ணிப் பெற்றுக்கொண்டு என் பைத்தாகி விட்டபடியால் "இந்திய பதிவு சட்டம் 1908 சொத்து மாற்று உரிமையின் கீழ்" கீழ்க்கண்ட சொத்தை இன்று தங்களுக்கு சுத்தக் கிரயம் செய்துகொடுத்து விட்டபடியால், சொத்தையும் இன்றே தங்களின் பூரண சுவாதீன உரிமைக்கு ஒப்புக்கொடுத்து விட்டேன்.

இன்று முதல் கீழ்க்கண்ட சொத்தை தாங்களே சர்வ சுதந்திரமாய், தானாதி, விநிமய, விற்கிரயங்களுக்கு அருகதையுடன், புத்திர, பௌத்திர, பாரம்பரியமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இனிமேல் கீழ்க்கண்ட சொத்தில் மேற்படி எனக்கோ, எனது வாரிசுதாரர்களுக்கோ அல்லது எனக்கு பொது அதிகாரம் அளித்தவருக்கோ, அவருடைய வாரிசுதாரர்களுக்கோ யாதொரு உரிமையும், பின் தொடர்ச்சியும் கிடையாதென்று உறுதிகூறுகிறேன்.

கிரயம் வாங்குபவர். கிரயம் கொடுப்பவர் முகவராக.

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 4 of 8

भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

भारत

रु.5000 Rs.5000

पाँच हजार रुपये FIVE THOUSAND RUPEES

सत्यमेव जयते

INDIA

PUDUCHERRY पुदुच्चेरि புதுச்சேரி

173943

G. VIJAYAKUMAR
Stamp Vendor
Bahour

1805
17.09.16

--: 4 :--

கீழ்க்கண்ட சொத்தில் வேறு கிரயம், தானம், உயில், கிரய உடன்படிக்கை, பாக உடன்படிக்கை, பரிவர்த்தனை போன்ற வினியோகமோ, அடமானம், போக்கியம், வங்கி பத்திர ஈட்டுக்கடன், நீதிமன்ற இணைப்புகள் போன்ற கடன்களோ எதுவும் கிடையாதென்றும், மேலும் கீழ்க்கண்ட சொத்தில் இன்றைய தேதிவரை அரசு ஆர்ஜிதம், கொம்யூன் பஞ்சாயத்து வரி பாக்கி மற்றும் மைனர் சம்மந்தமான பாதுகாப்பு கடன், வழக்குகள், எதுவும் கிடையாதென்றும், கீழ்க்கண்ட சொத்தில் "இந்தியன் சிவில் சட்டப்படி" மேற்படி எனக்கு பொது அதிகாரம் அளித்தவரைத்தவிர வேறுயாருக்கும் எவ்வித உரிமையும், பாத்தியதையும் கிடையாதென்றும், அப்படி யாராவது கீழ்க்கண்ட சொத்தில் உரிமைக்கொண்டாடி, அதனால் தங்கள் உரிமைக்கு ஏதாகிலும் பாதிப்பு நேர்ந்தால், அவ்விதம் எழும் சகல பாதிப்புகளையும், இழப்புகளையும் நானே முன்னின்று மேற்படி எனக்கு பொது அதிகாரம் அளித்தவரின் சொந்தச் செலவிலும், பொறுப்பிலும் தீர்த்துக்கொடுக்க சம்மதிக்கிறேன். மேற்படி எனக்கு பொது அதிகாரம் அளித்தவர், எனக்களித்த மேற்கண்ட பொது அதிகாரப் பத்திரத்தை இதுவரை ரத்து செய்யவில்லை என்று உறுதிகூறுகிறேன்.

கிரயம் வாங்குபவர். கிரயம் கொடுப்பவர் முகவராக.

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 5 of 8

भारतीय गैर न्यायिक INDIA NON JUDICIAL

भारत

रु.5000 Rs.5000

पाँच हजार रुपये FIVE THOUSAND RUPEES

सत्यमेव जयते

INDIA

PUDUCHERRY पुदुच्चेरि புதுச்சேரி 173942

G. VIJAYAKUMAR
Stamp Vendor
Bahour

1846.
17.08.16



இதன்படி நான் என் முழுமன சம்மதத்துடன் மேற்படியாளரின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் கீழ்க்கண்ட சாட்சிகளறிய எழுதிக்கொடுத்த சுத்த விற்கிரயப் பத்திரம்.

<u>சொத்து விபரம்</u>

புதுச்சேரி ரிடி., பாகூர் சப்.ரிடி., பாகூர் கொம்யூன் பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராம எண் 74, சேலியமேடு வருவாய் கிராமம், பின்னாச்சிக்குப்பம் கிராமத்தில் உள்ள ரீ.சர்வே எண் **149/10,** கதாஸ்தர் எண்கள் 124/1, 124/2, 127/1/2B, 127/B/1/1, 127/B/2/1, பட்டா எண் 605-ல் அடங்கிய நஞ்சை நிலத்தினை "இந்திரா நகர்" என்ற பெயரில் மனைகளாகப் பிரிக்கப்பட்டதில் மனை எண் **61** மட்டில். மேற்படி மனையின் விஸ்தீரணம் கிழக்கு-மேற்கில் இருபுறமும் 20-அடி, தெற்கு-வடக்கில் இருபுறமும் 50-அடி அளவுள்ள **1000**-சதுர அடி மட்டில் இந்த கிரயப்பத்திரத்தில் கட்டுப்பட்டது. இதற்கு சக்குபந்தி:- மனை எண் 62-க்கு கிழக்கு, மனை எண் 60-க்கு மேற்கு, மனை எண் 92-க்கு வடக்கு, 20-அடி அகல கிழக்கு-மேற்கு 2-வது குறுக்குத் தெருவிற்கு தெற்கு இதற்குட்பட்டது. இத்துடன் மனைப்பிரிவின் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.

கிரயம் கொடுப்பவர் முகவராக,

கிரயம் வாங்குபவர்.

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 6 of 8
Sub-Registrar

மேற்படி கிரயச்சொத்தின் மதிப்பு ரூ.2,50,000/-.

வழக்கம்போல் கையொப்பமிட்டுள்ளோம்.

கிரயம் வாங்குபவர். கிரயம் கொடுப்பவர் முகவராக.

சாட்சிகள்:

1) த/பெ.மனோகரன், 12-B, ரங்கன் வீதி, MGR நகர், திண்டிவனம்.


2) த/பெ.துளசி, 30, பழைய காமராஜ் நகர், பாகூர்.

***இந்த கிரயப்பத்திரத்தை தயாரித்தவர்:- ச. மனோகரன், பத்திர எழுத்தர், உரிமம் எண் 382/01, பாகூர்.


Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 7 of 8
Sub-Registrar

# இந்திரா நகர்

புதுச்சேரி, பாகூர் தாலுக்கா, சேலியமேடு வருவாய் கிராமம், பிள்ளைச்சிகுப்பம் ரீசர்வே எண்கள் : 149/3, 4A, 6, 7, & 10




| Plot No | Sq. Feet | Plot No | Sq. Feet |
|---|---|---|---|
| 1 | 1362 | 101 | 1070 |
| 2 | 1287 | 102 | 1057 |
| 3 | 1300 | 103 | 1047 |
| 4 | 1150 | 104 | 1037 |
| 5 | 1200 | 105 | 1027 |
| 6 | 1262 | 106 | 1017 |
| 7 | 950 | 107 | 1007 |
| 8 | 970 | 108 | 997 |
| 9 | 990 | 109 | 982 |
| 10 | 1010 | 110 | 977 |
| 11 | 1030 | 111 | 967 |
| 12 | 1050 | 112 | 957 |
| 13 | 1070 | 113 | 1584 |
| 14 | 1090 | 114 | 1390 |
| 15 | 1107 | 115 | 1410 |
| 16 | 1125 | 116 | 1427 |
| 17 | 1145 | 117 | 1442 |
| 18 | 1162 | 118 | 1465 |
| 19 | 1224 | 119 | 1490 |
| 20 | 1100 | 120 | 1510 |
| 21 | | 121 | 1433 |
| to | 1000 | 122 | 1190 |
| 56 | | 123 | 1160 |
| 57 | 952 | 124 | 1140 |
| 58 | 275 | 125 | 1115 |
| 59 | | 126 | 1090 |
| to | 1000 | 127 | 1040 |
| 93 | | 128 | 975 |
| 94 | 962 | 129 | 1425 |
| 95 | 920 | 130 | 907 |
| 96 | 1125 | 131 | 1280 |
| 97 | 1115 | 132 | 1432 |
| 98 | 1105 | 133 | 714 |
| 99 | 1095 | 134 | 945 |
| 100 | 1085 | 135 | 2123 |




**As Per Settlement**

| R.S.No. | H. A. C. | Sq.Feet |
|---|---|---|
| 149/3Pt | 00.10.00 | 10,760 |
| 149/4A | 00.30.14 | 32,430 |
| 149/6 | 00.17.50 | 18,830 |
| 149/7 | 00.19.50 | 20,982 |
| 149/10 | 01.12.00 | 1,20,512 |
| Total | 01.59.14 | 2,03,514 |

**As Per Layout**

| R.S.No. | H. A. C. | Sq.Feet |
|---|---|---|
| 149/3Pt | 00.02.72 | 2,927 |
| 149/4A | 00.13.61 | 14,644 |
| 149/6 | 00.17.50 | 18,830 |
| 149/7 | 00.19.50 | 20,982 |
| 149/10 | 01.12.00 | 1,20,512 |
| Total | 01.65.33 | 1,77,895 |

**Road Details**

| | |
|---|---|
| Main Road | - 12276 Sq. Feet |
| 1st Cross | - 7352 Sq. Feet |
| 2nd Cross | - 7396 Sq.Feet |
| 3rd Cross | - 7096 Sq.Feet |
| Total | - 34120 Sq. Feet |

| | |
|---|---|
| Total Plots Area | - 1,43,775 Sq. Feet |
| Total Road | - 34,120 Sq. Feet |
| Total Area | - 1,77,895 Sq. Feet |

Office of the Sub-Registrar Bahour
Doc No. 22097 of 2016 Book I
Page No. 8 of 8
Sub-Registrar